புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 194 | 19-01-2026 | திங்கள் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி

Volum 01 | Issue: 194 | 19-01-2026 | Monday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## “இபிஎஸ் வாக்குறுதி அளித்தால் அது செயலில் நடக்கும் : அதிமுக திட்டவட்டம்!

சென்னை: ஜன.19–

நான்கரை ஆண்டுகள் அஇஅதிமுக திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி வருவதை மட்டுமே ஒரே வேலையாக வைத்துள்ளது திமுக அரசு. இபிஎஸ் ஒரு வாக்குறுதி அளித்தால், அது செயலில் நடக்கும் என்று மக்களுக்கு நன்றாகத் தெரியும் என்பது திமுகவினருக்கே தெரியும் என்று அதிமுக தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், ‘நான்கரை ஆண்டுகள் அஇஅதிமுக திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டி வருவதை மட்டுமே ஒரே வேலையாக வைத்துவிட்டு, இப்போது “காப்பி அடிக்கிறாங்க மிஸ்” என்று அஇஅதிமுகவைப் பார்த்து சிறுபிள்ளைத்தனமாக திமுக அமைச்சர்கள் அழுவதைப் பார்த்தால் சிரிப்பு தான் வருகிறது.

எது ஒரிஜினல்? எது காப்பி?. அம்மா மருந்தகம் ஒரிஜினல் முதல்வர் மருந்தகம் காப்பி. அம்மா மினி கிளினிக் ஒரிஜினல் மக்களைத் தேடி மருத்துவம் காப்பி. தாலிக்கு தங்கம் ஒரிஜினல் அதை உல்டா செய்தது தானே புதுமைப் பெண் திட்டம். இப்படி அடுக்கிக் கொண்டே போனால், திமுக அரசு செய்ததாக சொல்வது எல்லாமே, அஇஅதிமுக திட்டங்களின் காப்பி தான்!

மக்கள் நலத் திட்டங்களுக்கு எப்போதுமே சொந்தக்காரங்க நாங்க தான். ஒரு குடும்பம் கொள்ளையடிக்க மட்டுமே திட்டம் போட்டு திருடும் திமுக கூட்டத்திற்கு இதெல்லாம் எப்படி தெரியும்.

மகளிருக்கு நேரடியாக நன்மைகள் சேர வேண்டும், அதுவும் பணமாக சேரவேண்டும் என்பதற்காகத் தான் தாலிக்கு தங்கம் திட்டத்தின் அடுத்த பரிணாமமாக பொங்கல் பரிசு திட்டத்தை நிறைவேற்றியது அஇஅதிமுக அரசு. அதன் அடுத்த கட்டமாகத்தான் 2021 தேர்தல் அறிக்கையில், மாதந்தோறும் மகளிருக்கு ரூ. 1500/ என அறிவித்தோம்.

எடப்பாடி பழனிசாமியின் சாதனைகளுக்கு ரிப்பன் வெட்டிய “டூப்” முதல்வர் ஸ்டாலினின் அரசு, வேறென்ன செய்து கிழித்தது. திமுக அரசின் மாதம் ஆயிரம் ரூபாயே, எடப்பாடியார் அவர்களின் தொடர் வலியுறுத்தலுக்குப் பிறகு, 28 மாதம் லேட்டா தானே ஸ்டாலின் அரசு கொடுத்தது. அதையும் இன்று வரை, சொன்னபடி அனைத்து மகளிருக்கும் கொடுக்கிறதா? தகுதி எனக் கூறி தமிழக மகளிரை இழிவு படுத்திய அரசை பெண்கள் மறந்துவிடுவார்களா?.

அஇஅதிமுக தேர்தல் வாக்குறுதிகளைப் பற்றிப் பேசும் இந்த அமைச்சர்கள் யாரென்று பார்த்தால், ஒருவர் ஒட்டுண்ணி ரகுபதி. வாய்ப்பு ஒன்று வந்தால், தான் கட்டியிருக்கும் வேட்டியை கழற்றி விட்டு, வேறொரு வேட்டிக்கு தாவி, வானத்தைப் பார்த்து துப்பிக் கொள்ளக் கூட தயங்காத இந்த ரகுபதி எல்லாம் தேர்தல் வாக்குறுதிகளைப் பற்றி பேசலாமா?

இன்னொருவர் டி.ஆர்.பி. ராஜா. பாக்ஸ்கான் துணை கம்பெனி என்று சட்டமன்றத்திலேயே கம்பி கட்டும் கதையெல்லாம் உருட்டியவர் தானே இவர்? “ஆளும் வளரணும், அறிவும் வளரணும், அது தான்டா வளர்ச்சி...” என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகள் தான் நினைவுக்கு வருகிறது.

இபிஎஸ் ஒரு வாக்குறுதி அளித்தால், அது செயலில் நடக்கும் என்று மக்களுக்கு நன்றாகத் தெரியும் என்பது திமுகவினருக்கே தெரியும். அதனால் தான் இவ்வளவு வயிற்றெச்சல். நல்லா கதறுங்க அமைச்சர் சார்களே. இன்னும் 2 மாசம் தான்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு முழுவதும் நூலகங்களை கோவில்களாக எழுப்புவோம் : முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை, ஜன.19–

பன்னாட்டு புத்தக கண்காட்சியின் நிறைவு விழா சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. இந்த விழாவில் பங்கேற்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு பேசியதாவது; புத்தகவாசிப்புக்காக பல சிறப்பான முன்னெடுப்புகளை திராவிட மாடல் அரசு செய்து வருகிறது. புத்தக வாசிப்பு மூலம் தமிழக இல்லங்களில் அறிவு தீ பரவ வேண்டும் என்ற நோக்கத்தில் திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. பழமைகளை பொசுக்கி தமிழகத்தை பண்படுத்தியது திராவிட இயக்கம். புத்தக திருவிழாவில் மொழிபெயர்ப்புகள், பதிப்பக பரிமாற்றம் ஆகியவற்றில் முக்கியத்துவம் செலுத்தப்பட்டது. தி.மு.க. ஆட்சியில் 4வது ஆண்டாக பன்னாட்டு புத்தக திருவிழா சென்னையில் நடத்தப்படுகிறது. மொழி என்பது பிரிக்கக்கூடிய சுவர் அல்ல அது உலக மக்களை இணைக்கக் கூடிய பாலம். தொழில் முதலீடு செய்ய மட்டுமல்ல அறிவை பகிர்ந்து கொள்வதற்கான சிறந்த மாநிலம் தமிழ்நாடு. உலகின் உயரிய சிந்தனைகள் தமிழக மக்களை வந்தடைய வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் புத்தக திருவிழாக்கள் நடத்தப்பட வேண்டும். சாகித்ய அகாடமி விருதுகள் மத்திய அரசின் தலையீட்டால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கலைத்துறையில் அரசியல் தலையீடு என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. தமிழக அரசின் சார்பில் அனைத்து மொழி புத்தகங்களுக்கும் தேசிய அளவில் விருது வழங்கப்படும். செம்மொழி இலக்கிய விருதுடன் ரூ.5 லட்சம் பணம் பரிசாக வழங்கப்படும்.” இவ்வாறு அவர் கூறினார். “,






## திராவிட பொங்கலை முன்னிட்டு 900 நபர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.அரிசி உள்ளிட்ட நலதிட்ட உதவிகளை வழங்கினார்.



விழுப்புரம், ஜன.19–
விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி சார்பில் சமத்துவம் பொங்கட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் திராவிட பொங்கலை முன்னிட்டு செஞ்சி கிழக்கு ஒன்றியம் சிங்கவரம் ஊராட்சியில் அரிசி உள்ளிட்ட நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். முன்னால் மாவட்ட கவுன்சிலர் குணசேகரன் முன்னிலை வகித்தார். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரங்கநாதன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர்செஞ்சிமஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு சிறப்புரையாற்றி 900நபர்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியசெயலாளர்நெடுஞ் செழியன், மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணி வண்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், நகர செயலாளர் கார்த்திக், ஒன்றிய கவுன்சிலர் ரவிசந்திரன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, ஒன்றிய நிர்வாகிகள் வாசு, அய்யாதுரை, பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் ஜான் பாஷா, பொன்னம்பலம், சங்கர், அஞ்சலைநெடுஞ் செழியன், நூர்ஜகான் ஜாபர், சுமித்ரா சங்கர், மகாலட்சுமி கமலநாதன், சிங்கவரம் ஊராட்சி நிர்வாகிகள் மணிவண்ணன், பாண்டியன், மாதேஸ்வரன், ரங்கநாதன், வரதன், குப்பன், அன்பு சேகர், சங்கர், சேகர், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர் ஊராட்சி கிளைக் கழக செயலாளர் முருகேசன் அனைவருக்கும் நன்றி கூறினார்.




பொங்கல் திருநாளை முன்னிட்டு தட்டாஞ்சாவடி தொகுதி லட்சுமி நகரில் மகளிர்களுக்கு கோலப்போட்டிகள், இளைஞர்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடத்தப்பட்டது, இவ்விழாவிற்கு , K.சேதுசெல்வம் அவர்கள் தலைமை வகித்து பரிசு பொருட்களை வழங்கி சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் ஜெனோமாறன் பில்டர்ஸ் நிர்வாக இயக்குனர் திரு.தங்க மணிமாறன், தாசில்தார் மணிகண்டன் கிருஷ்ணமூர்த்தி, தொழிலதிபர் K.முத்துராமன் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## தமிழர் திருநாளாம் பொங்கல் விழா..!




வந்தவாசி, ஜன 19
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி பொட்டி நாயுடு தெரு முத்தமிழ் சமூகநீதி பேரவை மற்றும் குடியிருப்போர் நலச்சங்கம் சார்பில் தமிழர் திருநாளாம் பொங்கல் விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த விழாவில் குழந்தைகள் பங்கேற்ற பரதநாட்டியம், சிலம்பம், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. மேலும் பொங்கலோ பொங்கல் என்ற தலைப்பில் சிறப்பு கவிதை வாசிப்பு, தமிழிசை பாடல்கள் உள்ளிட்டவை நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக ஆரணி எம்பி எம்.எஸ்.தரணி வேந்தன் பங்கேற்று, தமிழர் திருநாள் பற்றிய சிறப்புரை ஆற்றினார். மேலும் நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் புத்தக பரிசுகள் வழங் கப்பட்டது. நிகழ்ச்சியில் நகர் மன்ற தலைவர் ஜலால், துணைத் தலைவர் அன்னை சீனிவாசன், நகர செயலாளர் தயாளன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் மற்றும் தெரு பிரமுகர்கள் பலரும் பங்கேற்றனர். முன்னதாக அப்பகுதி தெருக்களில் கோலப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த சூரியதாங்கல் கிராமத்தில் விவசாயி சங்கர் வீட்டில் பிறந்த ஒரு ஆட்டுக்குட்டியானது தனது இரண்டு பின் கால்களும் செயல் இழந்த நிலையிலும் தனது முன்னங்கால்களை வைத்தே நடந்து சென்று வருவது அப்பகுதி மக்களிடையே அதன் விடா முயற்சியையும் , மனவலிமையும் ஆச்சர்யம் ஊட்டுவதாக கூறுகின்றனர்.

# மணப்பாறை அருகே ஆவாரங்காடு ஜல்லிக்கட்டு போட்டியில் சீறிப்பாய்ந்து வரும் ஜல்லிக்கட்டு காளைகள்.

# காளையை அடக்கி ரூ.50 ஆயிரம் ரொக்கப் பரிசை வென்ற காளையர்.



திருச்சி, ஜன. 19–
தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டி பொங்கல் பண்டிகையின் போது தொடங்கி தொடர்ந்து சில மாதங்கள் நடைபெறும். தென் மாவட்டங்களைப் போலவே திருச்சி மாவட்டத்திலும் ஜல்லிக்கட்டு போட்டியில் வெகுவிமரிசையாக நடைபெறும். மணப்பாறை பகுதியில் மாவட்டத்திலேயே அதிகப்படியான ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறுவது வழக்கம். இதே போல் திருச்சி மாவட்டம், மணப்பாறையை அடுத்த பாலக்குறிச்சி அருகே உள்ள ஆவாரங்காடு பொன்னர் சங்கர் கோவில் திடலில் ஒவ்வொரு ஆண்டும் தை 3 ம் நாள் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறும். இதே போல் இந்த ஆண்டும் ஜல்லிக்கட்டு போட்டி தொடங்கியது.

பாலக்குறிச்சி, கலிங்கபட்டி, கீரணிப்பட்டி, சோலையம் மாபட்டி ஆகிய 4 கிராம மக்களின் சார்பில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டி என்பதால் 4 கிராமங்களின் கோவில் காளைகளும் சிறப்பு வழிபாடுகளுக்கு பின் முதலில் வாடிவாசல் முன்பு கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. இதையடுத்து மருங்காபுரி வட்டாட்சியர் பாலகாமாட்சி, மணப்பாறை டிஎஸ்பி காவியா ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதையடுத்து ஒரே நேரத்தில் 4 ஊர் கோவில்காளைகளும் மொத்தமாக அவிழ்த்து விடப்பட்டது. மருத்துவக்குழுவினரால் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் காளையர்களும் களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர். 228 மாடு பிடி வீரர்கள் ஒரு சுற்றுக்கு 40 பேர் வீதம் ஒவ்வொரு குழுவாக வீரர்கள் ஜல்லிக்கட்டு களத்தில் களமிறங்கினர். வீரர்கள் களத்தில் உறுதிமொழி எடுத்துக் கொண்ட பின் வாடிவாசலில் இருந்து காளைகள் அவிழ்த்து விடப்பட்டது. இதைத் தொடர்ந்து திருச்சி, மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து அழைத்து வரப்பட்ட 611 காளைகள் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து அவிழ்த்து விடப்பட்டன. வாடிவாசலில் சீறிப்பாய்ந்த காளையை அடக்கினால் ரூ.50 ஆயிரம் ரொக்கப் பரிசு என காளை உரியையாளர் அறிவித்த நிலையில் அந்த காளையை தீரத்துடன் அடக்கி வீரர் ஒருவர் ரொக்கப் பரிசைப் பெற்றார்.

வாடிவாசலில் இருந்து வெளியே வந்த காளைகளில் சில மின்னல் வேகத்தில் யார் பிடியிலும் சிக்காமல் சென்றது. இதே போல் சில காளைகள் களத்தில் நின்று தன்னை அடக்க வாருங்கள் பார்ப்போம்... என்று கூறுவது போல் நின்று அருகில் வந்த காளையர்களை விரட்டியத்து பந்தாடியது. இருப்பினும் பல காளைகளை வீரர்கள் திமிலை இறுகப் பற்றி அனைத்து வெற்றி வானை சூடினர். இதில் வெற்றி பெற்ற காளைகளின் அதன் உரிமையாளர்களுக்கும், காளையை அடக்கிய காளையர்களுக்கும் பீரோ, கட்டில் சில்வர் பாத்திரங்கள், குக்கர், அண்டா உள்ளிட்ட பல்வேறு பொருட்களும், பரிசாக வழங்கப்பட்டது.

இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் பல பெண்களும் வாடிவாசலில் தங்கள் வளர்த்த காளையை அவிழ்த்து அங்கிருந்தவர்களை உற்சாகமடையச் செய்தனர். காளையை வீரர்கள் அடக்கும் போது, காளை களத்தில் சீறிப்பாய்ந்து வீரர்களை விரட்டி அடக்கும் போதும் மக்கள் கைகளை தட்டி, விசில் அடித்து ஆரவாரம் செய்தனர். 200 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இதில் 41பேர் காயமடைந்தனர். ஜல்லிக்கட்டை காண ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்ததால் அந்த பகுதியே விழாக்கோலம் கண்டது.

# சேலம் சென்னை இடையே விரைவில் கூடுதல் விமானம்: அதிகாரிகள் தகவல்.

சேலம். ஜன.19–
சேலம் சென்னை இடையே விரைவில் கூடுதல் விமானம் இயக்க அல் ஹிண்ட் ஏர் நிறுவனத்திற்கு ஒன்றிய அரசின் விமான போக்குவரத்துத்துறை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.

இதனால், விரைவில் சென்னைக்கு கூடுதல் விமான சேவை அமலுக்கு வரவுள்ளது. சேலம் காமலாபுரம் விமான நிலையத்தில் இருந்து உதான் திட்டத்தின் கீழ் பெங்களூரு, ஐதராபாத், கொச்சி ஆகிய 3 நகரங்களுக்கு இண்டிகோ, அலையன்ஸ் ஏர் நிறுவனங்கள் விமானங்களை இயக்கி வருகின்றன. இதுபோக உதான் திட்டமில்லாமல் சேலம் சென்னை இடையே தினசரி விமான சேவையை இண்டிகோ நிறுவனம் வழங்கி வருகிறது. இப்படி 4 முக்கிய நகரங்களுக்கு சேலத்தில் இருந்து விமானங்கள் இயக்கப்படுவதால், தினமும் குறைந்தது 300 பயணிகள் வந்துசெல்கின்றனர்.

இதுபோக சேலம் விமான நிலையத்தில் விமானிகள் பயிற்சி பள்ளியும் இயங்கி வருவதால், சிறிய ரக விமானங்களில் மாணவர்கள் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். சேலம் விமான நிலைய விரிவாக்க பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்சூழலில் தற்போது சேலம் சென்னை இண்டிகோ விமானம், மாலை 3.20 மணிக்கு புறப்பட்டுச் செல்கிறது. மறுமார்க்கத்தில் சென்னையில் இருந்து சேலத்திற்கு மாலை 5.30 மணிக்கு விமானம் வந்து சேர்கிறது. இந்நிலையில் சேலம் சென்னை இடையே காலை நேரத்தில் விமான சேவை வழங்க கேரளாவை தலைமையிடமாக கொண்ட அல்ஹிண்ட் ஏர் நிறுவனம், ஒன்றிய அரசின் சிவில் விமான போக்குவரத்துத் துறையை நாடியது.

இதுபற்றி விமான நிலைய அதிகாரிகள் கூறுகையில், ''சேலம் சென்னை இடையே தற்போது இண்டிகோ நிறுவனம் ஒரு விமானத்தை இயக்கி வருகிறது. தற்போது அல் ஹிண்ட் ஏர் நிறுவனம் மேலும் ஒரு விமானத்தை சேலம் சென்னை இடையே இயக்க அனுமதி பெற்றிருக்கிறது. இந்த புதிய விமான சேவை விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. சேலம் மட்டுமின்றி சுற்றியுள்ள நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்ட தொழிலதிபர்கள், வியாபாரிகள், மாணவர்கள் பயன்பாட்டிற்கு இந்த விமானம் பயனுள்ளதாக இருக்கும் என கருதுகிறோம்,'' என்றனர்.



வடமதுரை அருகே உள்ள தென்னம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் கடந்த 1995ஆம் ஆண்டு 10ம் வகுப்பு பயின்ற முன்னாள் மாணவ மாணவிகள் சந்திப்பு நிகழ்ச்சி நேற்று நடந்தது. இதில் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்ட முன்னாள் மாணவ மாணவிகள் தங்களது பசுமையான நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். அதனைத்தொடர்ந்து அவர்களது பள்ளி ஓவிய ஆசிரியை பாத்திமா மேரிக்கு நினைவு பரிசு வழங்கி கௌரவப்படுத்தினர். அதன்பின்னர் குடும்பத்தினருடன் கலை நிகழ்ச்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டனர். அதனைத்தொடர்ந்து அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தி மகிழ்ந்தனர். அதன்பின்னர் முன்னாள் மாணவர்கள் சார்பாக பள்ளிக்கு கண்காணிப்பு கேமராக்களை வழங்கினர்.

## புதுச்சேரியில் நாம் தமிழர் கட்சி சார்பில் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து புகழ் வணக்கம்!

புதுச்சேரியில் உலகப் பொதுமறையாம் திருக்குறளைத் தந்த வான்புகழ் வள்ளுவப் பெருந்தகையின் சிறப்பினைப் போற்றும் திருவள்ளுவர் நாளை முன்னிட்டு, புதுச்சேரி நாம் தமிழர் கட்சி சார்பில் சிறப்பான முறையில் புகழ்



வணக்கம் செலுத்தப்பட்டது.

உருளையன்பேட்டை தொகுதிக்கு உட்பட்ட புதிய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு, கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்விற்கு நாம் தமிழர் கட்சியின் மாநிலத் தலைவர் ஞானபிரகாசம் தலைமை தாங்கினார். உருளையன்பேட்டை தொகுதி உறவுகள் சிவக்குமார், ராஜ்கமல், குமரேசன், பாலு மற்றும் பாலச்சந்தர் ஆகியோர் நிகழ்வை முன்னெடுத்தனர்.

இந்த வீரவணக்க நிகழ்வில் மாநில மற்றும் தொகுதி நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்:

கௌரிபாக்யராஜ், ரமேசு, வேலவன், இளங்கோவன், திருமுருகன், காமராஜ், பிரிய குமரன், பாண்டி செல்வம், ராஜ்குமார், சங்கர், பாலாஜி, சரவணன், முகுந்தன், சுப்பிரமணி, ஞானமுத்துசெல்வம், கார்த்திக் குமாரி, சசிகாமராஜ், தமிழரசி, ஜெயசூர்யா, ஆனந்து, மனோஜ், ஈழ நிலா, ஈழ வேந்தன் ஆகியோர் ஐயன் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தினர்.



பெரியகோட்டை அருகே உள்ள கோம்பையான்பட்டி புனித அந்தோணியார் சிற்றாலயத்தில் மத நல்லிணக்கண சமபந்தி அன்னதான விழா நேற்று நடைபெற்றது. இதையொட்டி புனித பெரிய அந்தோனியார் ஆலயத்தில் உள்ள புனிதர்கள் சொரூபங்களுக்கும், அதே பகுதியில் உள்ள விநாயகர், காளியம்மன், மாரியம்மன் , அணைக்குளம் கன்னிமார் கோவில்களுக்கும், புனித சந்தியாகப்பர், புனித செபஸ்தியார், புனித ஆரோக்கிய மாதா, புனித அமலோற்பவ மாதா ஆலயங்களுக்கும் பொதுமக்கள் ஊர்வலமாக சென்று பூ மாலை அணிவித்து வழிபாடு செய்தனர். அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் திருப்பலி நடத்தி பொங்கல் வைத்து கொண்டாடினர். அதன் பின்பு காணிக்கையாக வந்த 30 ஆட்டுக் கிடாய்கள், 140 சேவல்கள் மற்றும் 500 கிலோ அரிசியை கொண்டு பிரியாணி தயார் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு உணவருந்தி சென்றனர். இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை ஊர் முக்கியஸ்தர்கள், ஊர் பொதுமக்கள் மற்றும் புனித அந்தோணியார் சிற்றாலய விழா குழுவினர் மேற்கொண்டனர்.




கழக ஒருங்கிணைப்பாளர் மரியாதைக்குரிய அண்ணன் திருமிகு. OPS அவர்களின் மேலான ஆணைப்படி, கழக நிறுவனர் புரட்சித்தலைவர் அவர்களின் 109வது ஆண்டு பிறந்தநாள் விழா, புதுவை மாநில அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு கழகம் சார்பில், மாநிலக் கழக செயலாளர் ஓம்சக்தி சேகர் அவர்கள் தலைமையில் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. புதுவை குயவர் பாளையம், லெனின் வீதி மாநிலக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் அலங்கரித்து வைக்கப்பட்ட புரட்சித்தலைவர் அவர்களின் உருவப்படத்திற்கு மாநிலக் கழக செயலாளர் . ஓம்சக்தி சேகர் அவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து கழகக் கொடி ஏற்றப்பட்டு, பட்டாசுகள் வெடித்து இனிப்புகள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, 200க்கும் மேற்பட்டோர் புதிய பேருந்து நிலையம் எதிரே உள்ள புரட்சித்தலைவர் சிலைக்கு, திரு. ஓம்சக்தி சேகர் அவர்கள் தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்தனர். இதில் திரளான நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதேபோன்று, அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு கழகம் சார்பில் புதுவை முழுவதும் பல்வேறு தொகுதிகளில் புரட்சித்தலைவர் உருவப்படம் வைத்து, ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

# டாஸ்மாக் கடை அகற்றக் கோரி கொந்தளித்த பொதுமக்கள்- பெண்கள், மாணவிகளின் பாதுகாப்பு கேள்விக்குறி!



விழுப்புரம், ஜன.19–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த பாலப்பாடி பகுதியில் இருந்து புதுப் பாளையம் பாக்கம் செல்லும் முக்கிய சாலையோரத்தில் செயல்பட்டு வரும் அரசு மதுபானக் கடையை உடனடியாக மூட வேண்டும் என வலியுறுத்தி, கிராம பொதுமக்கள் டாஸ்மாக் கடை முன்பு கடும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாலப்பாடி பகுதியில் இயங்கி வரும் இந்த டாஸ்மாக் கடையில் தினந்தோறும் மதுபானம் அருந்தும் சிலர், சாலையில் செல்லும் இளம்பெண்கள், கல்லூரி மாணவிகள், பள்ளி மாணவர் மாணவிகளை கிண்டல் செய்வதும், கேலி செய்வதும், விசில் அடித்து அவமதிப்பதும் போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டினர். இதனால் சுற்று வட்டார பகுதிகளில் சுமார் 10 கிராம பகுதி மாணவ மாணவிகள் இவ்வழியாக செல்ல வேண்டியது குறிப்பிடத்தக்கது எனவும் பெண்கள் மற்றும் மாணவிகள் அச்சத்துடன் சாலையில் செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், இந்த மதுபானக் கடை காரணமாக அந்தப் பகுதியில் அமைதி குலைந்து, சமூக ஒழுங்கு சீர்குலைவதாகவும், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் கூறினர். பெண்கள் மற்றும் மாணவிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ள நிலையில், மாவட்ட நிர்வாகம் இதனை அலட்சியப் படுத்தக் கூடாது என அவர்கள் ஆவேசமாக வலியுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, பொதுமக்கள் டாஸ்மாக் கடை முன்பு கூடி, “டாஸ்மாக் கடை அகற்றப்பட வேண்டும்”, “பெண்களுக்கு பாதுகாப்பு வேண்டும்” என முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர். உடனடியாக இந்த மதுபானக் கடையை அகற்றி, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும், மாவட்ட நிர்வாகமும் தமிழக அரசும் தலையிட்டு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

இந்த போராட்டத்தின் மூலம் எழுந்துள்ள மக்களின் வேதனைக்குரல் மீது நிர்வாகம் கவனம் செலுத்துமா?

பெண்கள் மற்றும் மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

என்ற கேள்விகள் தற்போது அந்தப் பகுதியில் பெரும் எதிர் பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

# ஈரோடு மாவட்டத்தில் 3 ஆயிரம் விசைத்தறிகளில் இலவச சீருடை உற்பத்தி தொடக்கம்.. பொங்கல் பண்டிகைக்கு பின் பணிகள தீவீரம் ..



ஈரோடு. ஜன. 19

நடப்பு கல்வி ஆண்டிற்கான அரசு பள்ளிகளில் படித்து வரும் மாணவ, மாணவிகளுக்கான அரசு வழங்கும் இலவச சீருடைகள் தயாரிக்கும் பணிகள் ஈரோடு மாவட்டத்தில் தொடங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படித்து வரும், மாணவ, மாணவிகளுக்கு இலவச பள்ளி சீருடைகள் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. மேலும் காலை உணவு திட்டத்தையும் அரசு பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு தமிழக அரசு வழங்கி வருகிறது.

இந்த நிலையில் நடப்பு கல்வி ஆண்டிற்கான ( 2026= 2027) கல்வி ஆண்டில் அரசு பள்ளிகளில் பயின்று வரும் மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் இலவச பள்ளி சீருடை உற்பத்திக்கான பணிகள் ஈரோட்டில் தொடங்கியுள்ளது.

பொங்கல் பண்டிகை முடிந்த நிலையில் இந்த இலவச சீருடை உற்பத்தி தொடங்கியுள்ள நிலையில், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் இந்த இலவச சீருடை துணி தயாரிக்கும் உற்பத்தி பணிகள் தொடங்கியுள்ளன.

மேலும் பள்ளி இலவச சீருடைகள் தயாரிப்பது குறித்து விசைத்தறி உரிமையாளர்கள் தெரிவித்ததாவது..

இந்த ஜனவரி மாதம் முதல் வாரத்தில் சீருடை உற்பத்தி பணிகள் தொடங்கப்பட்டு ஏப்ரல் மாதம் இறுதிக்குள் அந்த பணிகள் முடிவடையும். ஆனால் இந்தாண்டு இதுவரை அதற்குரிய ஆர்டர்கள் எங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை. அதே நேரம் கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்து 25 சதவிகிதம் நூல்கள் அனுப்பப்பட்டு, அதற்குரிய உற்பத்தியை ஈரோட்டில் 3 ஆயிரம் விசைத்தறிகளில் இந்த உற்பத்தி பணியானது தொடங்கியுள்ளது.

அதே நேரம் கடந்த ஆண்டு 98 லட்சம் மீட்டர் துணி விசைத்தறிக்க ஒதுக்கப்பட்டது. அதில் 68 லட்சம் மீட்டர் விசைத்தறிவுக்கு ஒதுக்கப்பட்டது.

அதேபோல் கோட்டு மற்றும் பாவாடைக்கு ஒரு கோடி மீட்டர் துணி ஒதுக்கீடு செய்யப் பட்டது. சட்டை தைக்க 2 கோடியே 50 லட்சம் மீட்டர் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேலும் கடந்த ஆண்டை விட துணி உற்பத்திக்கு ஒரு ரூபாய் கூடுதலாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அதே நேரம் உயர்த்தப் பட்ட கூலி கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

மேலும் இலவச பள்ளி சீருடைக்கான ஆர்டரை அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும். திமுக அரசு கடந்த தேர்தலில் விசைத்தறிகளுக்கு கூடுதலான ஆர்டரை வழங்குவதாக தேர்தல் வாக்குறுதி அளித்து இருந்த நிலையில், அவைகள் தானியங்கி தறிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே தமிழக அரசு விசைத்தறியாளர்களின் கோரிக்கையை ஏற்று விசைத்தறிகளுக்கு கூடுதல் ஆர்டரை வழங்க வேண்டும்.

இவ்வாறு விசைத்தறி உரிமையாளர்கள் அரசுக்கு வேண்டுகோள் வைத்துள்ளனர்.

# வந்தவாசி பகுதியில் வினோதமான முயல் விடும் விழா..!





வந்தவாசி, ஜன 19:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த நல்லூர் கிராமத்தில் காணும் பொங்கலன்று முயல் விடும் வினோதமான திருவிழா பாரி வேட்டை நிகழ்வாக சிறப்பாக நடைபெற்றது. குழந்தைகளின் தோஷம் நீங்க நரி முகத்தை காட்டி அதை காட்டுப் பகுதியில் விடுவது பாரம்பரியமான வழக்கம். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக நரி கிடைக்காததால் முயல் விடும் திருவிழா வாக ஊர்மக்கள் நடத்தி வருகின்றனர்.

திரௌபதி அம்மன் கோயில் திடலில் உற்சவ மூர்த்தி அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்று, முயலை தூக்கி பிடித்தவாறு தீபாராதனை நடை பெற்றது. பிறகு குழந்தைகள் அனைவருக்கும் முயல் முகத்தை காட்டி தலையில் ஆசிர்வாதம் வாங்கினர். இந்த விழாவில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் குழந்தைகளுடன் பங்கேற்றனர். மேலும் பூஜிக்கப்பட்ட முயலானது கரும்புத் தோட்டத்தில் விடப்பட்டது. இந்த வினோத திருவிழாவை ஆர்வத்துடன் பலரும் கண்டுகளித்தனர்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான பேராவாலி ஒலிம்பிக் சங்கம்..



ஈரோடு மாவட்ட தலைவராக டாக்டர் என் எம் பிரதீப் தேர்வு.. சங்கத்தின் மாவட்ட தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள டாக்டர் என். எம் பிரதீப்புக்கு சங்கத்தின் நிர்வாகிகள், மாற்றுத்திறனாளிகள் வாழ்த்து தெரிவித்தனர்.

# சேலத்தில் பெற்ற தாயை கழுத்தை அறுத்துக் கொன்று, எரித்து உடலை புதைத்த மகள்.



சேலம்.ஜன. 19–

சலம் மாவட்டம் கஸ்தூரிப்பட்டி பகுதியில் குடும்பப் பெண்ணைக் கொலை செய்து உடலை எரித்துப் புதைத்த அதிர்ச்சியூட்டும் சம்பவம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

கஸ்தூரிப்பட்டியைச் சேர்ந்த தவசியப்பன் என்பவரது மனைவி கனகவல்லி, அதே பகுதியில் உள்ள தறி பட்டறையில் பணிபுரிந்த செந்தில் என்பவருடன் பழகி வந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தத் தகாத உறவு கனகவள்ளியின் குடும்பத்தினருக்குத் தெரியவந்தபோது, இது தொடர்பாக வீட்டில் கடும் வாக்குவாதம் ஏற் பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் சேர்ந்து கனகவள்ளியைத் தீர்த்துக்கட்டத் திட்ட மிட்டனர்.

இதன்படி கனக வள்ளியை அவரது மகன் கார்த்திக் உள்ளிட்டோர் சேர்ந்து கழுத்தை அறுத்து ரத்த வெள்ளத் தில் படுகொலை செய்தனர். பின்னர் எவ்வித தடயமும் கிடைக்கக் கூடாது என்ற நோக்கத்தில், அவரது உடலைத் தீயிட்டு எரித்து குழி தோண்டிப் புதைத்துள்ளனர்.

இது குறித்துத் தகவல் அறிந்த கன்னங்குறிச்சி காவல்துறையினர் தீவிர விசாரணை மேற் கொண்டனர். விசாரணையில் கொலைக் குற்றம் உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கனக வள்ளியின் கணவர் தவசியப்பன், மகன் கார்த்திக் உள்ளிட்ட ஐந்து பேரை காவல் துறையினர் கைது செய்தனர். இந்தச் சம்பவம் சேலம் மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சேலத்தில் சோகம் எருதாட்டத்தில் 4 பேர் உயிரிழப்பு.



சேலம். ஜன.19–

காணும் பொங்கலை யொட்டி,சேலம் மாவட்டத்தில் நடந்த எருதாட்டத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

எடப்பாடி அருகே கொங்கணாபுரம் அடுத்த புதுப்பாளையம் ஊராட்சி ஸ்ரீ அய்யனாரப்பன் கோயிலில் ஆண்டுதோறும் காணும் பொங்கலையொட்டி, ஏருதாட்டம் நடத்துவது வழக்கம்.

அந்த வகையில், கோயில் வளாகத்தில் காளை மாடு வைத்திருப்பவர்கள் ஏருதாட்டத்தில் விடுவதற்கு தயார் நிலையில் வைத்திருந்தனர். ஆனால், கோயில் தர்மகர்த்தா விவ காரத்தில் இருதரப்பினரிடையே போட்டி போட்டுக் கொண்டு எருதாட்டம் நடத்த அனுமதி பெறாமல் இருந்ததாக கூறப்படுகிறது. இதனால் பொதுமக்களின் பாது காப்புக்காக கொங்கணாபுரம் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் 20க்கும் மேற்பட்ட காளை மாடுகளை அப்பகுதி மாடுபிடி வீரர்கள் திடீரென கோயில் முன்பு கொண்டு வந்தனர். இதனை பார்த்த போலீஸார் தடுக்க முயன்றனர். இதையடுத்து, எருதாட்டம் நடத்தக்கூடாது என்று கூறி விரட்டினர். இதனையும் மீறி காளைகளுடன் 50க்கும் மேற்பட்ட காளைபிடி வீரர்கள் கோயிலை சுற்றி வந்தனர். போலீஸாரின் உரிய அனுமதியின்றி நடந்த எருத்தாட்டத்தினால் போலீ ஸார் மற்றும் பொதுமக்கள் என 5 பேர் காயமடைந்தனர். மேலும், இரு சக்கர வாகனத்தை காளை மாடு முட்டி தூக்கி வீசியதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அதேபோல், கெங்கவல்லி அடுத்த செந்தாரப்பட்டி மாரியம்மன் கோயிலில் எருதாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் காளைகள் ஓட விடப்படும் பாதை ஓரமாக, ஊர் பொதுமக்கள் திரளாக நின்று பார்த்து, கண்டு ரசித்து கொண்டிருந்தனர். அப்போது, காளை ஒன்று, பார்வை யாளர்கள் இடையே புகுந்து ஓடியபோது, சக்திவேல் (23) என்பவரை தாக்கிச் சென்றது. இதில் பலத்த காயமடைந்து சக்திவேல் உயிரிழந்தார்.

அதேபோல், தம்மம்பட்டி அருகே கொண்டையம்பள்ளி பகுதியில் நடந்த எருதாட்டத்தில் பார்வையாளர்கள் இடையே புகுந்து காளை ஓடிய போது, வினிதா (30) என்பவர் பலத்த காயமடைந்து உயிரிழந்தார். இது குறித்து தம்மம்பட்டி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அதேபோல், கீரிப்பட்டி பகுதியில் நடந்த எருதாட்டத்தை பார்த்து கொண்டிருந்த பெரியசாமி (65) என்பவரை காளை கழுத்தில் முட்டியதில் பலத்த காய மடைந்து உயிரிழந்தார். இதுகுறித்து மல்லியக்கரை போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதேபோல், மேச்சேரி அருகே புக்கம்பட்டி மாரியம்மன் கோவில் இன்று மாலை எருதாட்டம் நடந்தது. அப்போது, எருதாட்டத்தில் கடைசியாக வந்த காளை, வேடிக்கை பார்த்து கொண்டு இருந்த அதே பகுதியை சேர்ந்த ராஜ்குமார் (58) என்பவரை வயிற்றி குத்தியதில் பலத்த காயமடைந்தனர். பின்னர், மேச்சேரியில் முதலுதவி பெற்று சேலம் கொண்டும் செல்லும் வழியில் உயிரிழந்தார். இதுகுறித்து மேச்சேரி போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# புதுச்சேரி மாநில திமுக சார்பில் திருவள்ளுவர் தின விழா கொண்டாட்டம் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில் திமுக-வினர் மரியாதை

புதுச்சேரி, ஜன.19–

புதுச்சேரி மாநில திமுக சார்பில் நடந்த திருவள்ளுவர் தின விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில் திமுக–வினர் திருவள்ளுவர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள் வழியில், தமிழ் புத்தாண்டு, பொங்கல் மற்றும் திருவள்ளுவர் தினம் ஆகிய முப்பெரும் விழாவை புதுச்சேரி மாநில திமுக ஆண்டு தோறும் சிறப்பாக கொண்டாடி வருகிறது. அதன்படி இந்த ஆண்டுக்கான முப்பெரும் விழா புதுச்சேரி மாநில தி.மு. கழகம் சார்பில் லப்போர்த் வீதியில் உள்ள தலைமைக் கழக அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது. அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவள்ளுவர் படத்திற்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில் திமுகவினர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து புதிய பேருந்து நிலைய முகப்பில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு மாநில திமுக சார்பில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில் திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சிகளில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல் சம்பத, எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ. மூர்த்தி, நந்தா சரவணன் மாநில துணை அமைப்பாளர்கள் குமார், தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், ஆறுமுகம், அருட்செல்வி, பொதுக் குழு உறுப்பினர்கள் கோபால், கார்த்திகேயன், ராமசாமி, செல்வநாதன், பிரபாகரன், சக்திவேல், தங்கவேலு, வேலவன், சண்முகம், வேலன், தர்மராஜன், கோகுல், செந்தில்வேலன், கோபாலகிருஷ்ணன், அமுதாகுமார், நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், சீத்தாராமன், திராவிட மணி, பாண்டு அரிகிருஷ்ணன், நடராஜன், சவுரிராஜன், மணிகண்டன், சக்திவேல், தியாகராஜன், சிவக்குமார், ஆறுமுகம், வடிவேல், மோகன், ரவிச்சந்திரன், சக்திவேல், ராஜாராமன், பார்த்திபன், இளஞ்செழிய பாண்டியன், கலிய. கார்த்திகேயன், ராதாகிருஷ்ணன், கலைவாணன், சத்தியவேலு, தொகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் நித்திஷ், பசுபிக் சங்கர், அணிகளின் அமைப்பாளர்கள் எஸ்.பி. மணிமாறன், தொமுச அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி பரிமளம், தகவல் தொழில்நுட்ப அணி தமிழசரன், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி சுமதி, தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி குலசேகரன், இலக்கிய அணி மோகன்தாசு, மீனவர் அணி கோதண்டபாணி, ஆதிதிராவிடர் நலக்குழு ஆறுமுகம், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சங்கர் (எ) சிவ சங்கரன், பொறியாளர் அணி அருண்குமார், நெசவாளர் அணி செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ரவிச்சந்திரன், வர்த்தகர் அணி ரமணன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி மதிமாறன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு முகம்மது ஹாலிது, மருத்துவர் அணி ஆனந்த் ஆரோக்கியராஜ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.









தெய்வப்புலவர் திருவள்ளுவர் தின விழா புதுச்சேரி அரசு சார்பில் கொண்டாடப்பட்டது இதனையொட்டி புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு சட்டப்பேரவைத் தலைவர் செல்வம். R, பொதுப்பணித்துறை அமைச்சர் க. லட்சுமி நாராயணன், சட்டப்பேரவைத் துணைத்தலைவர் பெ. ராஜவேலு, அரசு கொறடா P.V. ஆறுமுகம் (எ) A.K.D., சட்டமன்ற உறுப்பினர்கள் கிரி சாய் J. சரவணன் குமார், G.நேரு (எ) குப்புசாமி, K.S.P. (எ) S. ரமேஷ், R.பாஸ்கர் (எ) தட்சிணாமூர்த்தி, U. லட்சுமிகாந்தன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

# எம்.ஜி.ஆரின் 109வது பிறந்தநாள்: புதுச்சேரியில் சிலைகளுக்கு மாலை அணிவித்து அமமுக லாவண்யா மரியாதை!





புதுச்சேரி: ஜன.19–

மக்கள் திலகம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் 109 வது பிறந்தநாளை முன்னிட்டு, புதுச்சேரி மாநில அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி மாநில கழக இணை செயலாளர் (மேற்கு) முனைவர் லாவண்யா அவர்கள், புதுச்சேரி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மாரியாதை செலுத்தினார். இதனைத் தொடர்ந்து, பேருந்து நிலையத்திற்கு வந்திருந்த பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து, தனது தொகுதிக்குட்பட்ட மூலகுளம் பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலையையும் அலங்கரித்து, முனைவர் லாவண்யா அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தார். எம்.ஜி.ஆரின் புகழைப் போற்றும் வகையில் நடைபெற்ற இந்த விழாவில், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்



முதலியார்பேட்டை தொகுதி பாஜக சார்பில் தாமரை தை பொங்கல் விழா முதலியார்பேட்டை தொகுதியில் உள்ள பிராமினாள் வீதியில் நமது மக்கள் சட்டமன்ற உறுப்பினர் A.பாஸ்கர் அவர்கள் தலைமையிலும் மாநில தலைவர் V.P.ராமலிங்கம் அவர்கள் முன்னிலையில் 216 பொங்கல் பானை வைத்து பொங்கல் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேலும் 500 கும் மேற்பட்ட பெண்களுக்கு நமது மக்கள் சட்டமன்ற உறுப்பினர் A.பாஸ்கர் புடவை வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அசோக்பாபு, நகர மாவட்ட தலைவர் கிருஷ்ணராஜ், வில்லியனூர் மாவட்ட பொறுப்பாளர் வெற்றிச்செல்வன், ஓபிசி அணி மாநில தலைவர் கோவேந்தன், தொகுதி தலைவர் புவனேஸ்வரி, மாவட்ட தலைவி அனுராதா, திருச்சந்திரன் , கமலக்கண்ணன், லயன் சுரேஷ், மருதலையப்பன், சுரேஷ்குமார், காந்தி, மற்றும் பலர் உடனிருந்தனர்

# முதலியார்பேட்டையில் காணும் பொங்கல் விழா:

## வெற்றி பெற்றவர்களுக்கு முன்னாள் எம்.எல்ஏ., ஏ.பாஸ்கர் பரிசுகள் வழங்கினார்!



புதுச்சேரி, ஜன.19–

புதுச்சேரி முதலியார் பேட்டை தொகுதிக்குட்பட்ட துளுக்காணத் தம்மன் கோயில் திடலில், காணும் பொங்கலை முன்னிட்டு நியூ ஸ்டார்ஸ் விளையாட்டு மற்றும் சமூக சேவை இளைஞர் நற்பணி மன்றம் மற்றும் ஊர் இளைஞர்கள் இணைந்து நடத்திய 17 ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் (17.01.2026) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

பாரம்பரியத்தை போற்றும் வகையில் நடைபெற்ற இந்த விழாவில், இளைஞர்களுக்கான உரி அடித்தல், சறுக்கு மரம் ஏறுதல் மற்றும் மகளிருக்கான கோலப்போட்டிகள் என பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் அப்பகுதியைச் சேர்ந்த திரளான இளைஞர்களும், பொதுமக்களும் மிகுந்த உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு முதலியார்பேட்டை தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கி.பாஸ்கர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, பரிசுகளை வழங்கிப் பாராட்டு தெரிவித்தார்.

இந்த விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அண்ணாதுரை முன்னின்று செய்திருந்தார். இந்நிகழ்வில் அப்பகுதியைச் சேர்ந்த பெரியவர்கள், மகளிர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

# மணப்பாறை அருகே பொத்தமேட்டுப்பட்டியில் கோலாகலமாக நடைபெற்றுவரும் ஜல்லிக்கட்டு விழா. 700 காளைகள் 300 மாடுபிடி வீரர்கள் பங்கேற்பு.



திருச்சி. ஜன. 19–

திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே உள்ள பொத்த மேட்டுப் பட்டியில் அந்தோணியார் பொங்கல் விழாவை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 18 ம் தேதி ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறும். அதே போல் இந்த ஆண்டும் இன்று ஜல்லிக்கட்டு விழா புனித வியாகுலமாதா தேவாலயத்தின் முன்பு உள்ள திடலில் துவங்கி நடைபெற்றுவருகிறது. ஸ்ரீரங்கம் கோட்டாட்சியர் சீனிவாசன் கொடியசைத்து விழாவை தொடங்கி வைத்தார். இதில் திருச்சி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, தேனி, கரூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ள 700 ஜல்லிக்கட்டு காளைகள் வாடிவாசல் வழியாக அவிழ்த்து விடப்படுகின்றன. சீறி வரும் காளைகளை அடக்க 300 மாடுபிடி வீரர்கள் ஒவ்வொரு சுற்றாக களம் காணுகின்றனர். போட்டியில் பங்கேற்கும் அனைத்து காளைகளுக்கும் 5 கிலோ அரிசி வழங்கப்படும் நிலையில் போட்டியில் வீரர்களின் பிடிக்கு அடங்க மறுத்து வெற்றி பெறும் காளைகளுக்கும், காளைகளை அடக்கி வெற்றி பெறும் காளையர்களுக்கும் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள், சைக்கிள், பீரோ, கட்டில், மிக்சி, கிரைண்டர், மின்விசிறி, அண்டா, ரொக்கப்பணம் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பரிசுகள் வழங்கப்படுகின்றன. 200 க்கும் மேற்பட்ட காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். ஜல்லிக்கட்டில் காயமடைபவர்களுக்கு அதே பகுதியில் மருத்துவக்குழுவினர் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்னதாக போட்டியில் கலந்து கொள்ளும் காளைகளும், மாடுபிடி வீரர்களும் முறையான மருத்துவ பரிசோதனைக்கு பின்னரே அனுமதிக்கப் படுகின்றனர். ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்கள் உள்ளிட்டவைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஜல்லிக்கட்டை காண ஆயிரக்கணக்கானோர் திரண்டுள்ளனர்.

# புதுச்சேரியில் விதிகளை மீறி இயங்கும் சுற்றுலா படகுகள்: சுற்றுலாப் பயணிகள் அச்சம்!

புதுச்சேரி, ஜன.19–

புதுச்சேரியின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றான படகு சவாரிப் பகுதிகளில், எவ்வித வரைமுறையும் இன்றி இயக்கப்படும் சுற்றுலா படகுகளால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் முன்னிலையிலேயே படகு ஓட்டுநர்கள் மோதிக்கொள்ளும் சம்பவங்கள் பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

சமீபகாலமாக, புதுச்சேரியின் உப்பனாறு மற்றும் கடற்கரை ஒட்டிய பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்வதில் படகு ஓட்டுநர்களிடையே கடும் போட்டி நிலவுகிறது. பயணிகளைத் தங்கள் படகிற்கு அழைப்பதில் தொடங்கும் இந்த போட்டி, அவ்வப்போது கைகலப்பாக மாறுகிறது. சுற்றுலா வந்த இடத்தில், குழந்தைகள் மற்றும் பெண்கள் முன்னிலையிலேயே ஓட்டுநர்கள் தகாத



வார்த்தைகளால் திட்டி, அடித்துக் கொள்வது புதுச்சேரி சுற்றுலாவின் நற்பெயரைக் கெடுப்பதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அரசு அனுமதியைப் பெற்று இயங்கும் படகுகளைத் தவிர்த்து, எந்தவிதமான உரிமமும் (License) இல்லாத பல தனியார் படகுகள் சட்டவிரோதமாக இயக்கப்படுவதாகத் தெரிகிறது. இந்தப் படகுகளில்,

போதிய எண்ணிக்கையிலான உயிர் காக்கும் உடைகள் (Life Jackets) இருப்பதில்லை.

அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்வது தொடர்கதையாக உள்ளது.

முறையான பயிற்சி பெறாத நபர்கள் படகுகளை இயக்குவதால் விபத்து ஏற்படும் அபாயம் அதிகம் உள்ளது.

இவ்வளவு அத்துமீறல்கள் பகிரங்கமாக நடந்தும், சுற்றுலாத்துறையோ அல்லது காவல் துறையோ உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனப் புகார்கள் எழுந்துள்ளன. “பெரிய விபத்து ஏற்பட்டு உயிர்ச்சேதம் உண்டாகும் வரை அரசு காத்திருக்கப் போகிறதா?” எனச் சுற்றுலாப் பயணிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

விதிகளை மீறும் படகுகளைப் பறிமுதல் செய்யவும், பொது இடங்களில் ரகளையில் ஈடுபடும் ஓட்டுநர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் அரசு முன்வர வேண்டும் என்பதே அனைவரின் கோரிக்கையாக உள்ளது.

# குடியரசுத் தலைவர் மாளிகையை பார்வையிட அனுமதி இல்லை

புதுடெல்லி: ஜன.19–

வரும் ஜனவரி 26ம் தேதி குடியரசு தின அணிவகுப்பு ‘கர்த்தவ்ய பாதையில்’ நடைபெற உள்ளது.

இதுகுறித்து குடியரசுத் தலைவரின் செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், ‘‘குடியரசு தின அணிவகுப்பு மற்றும் பாசறைக்கு திரும்புதல் விழாக்கள் காரணமாக ஜனவரி 21 முதல் 29 வரை குடியரசுத் தலைவர் மாளிகையை (சர்க்யூட் 1) பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதி இல்லை’’ என கூறப்பட்டுள்ளது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA**, printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421